## August 4, 2025 - தினமணி செய்தித்தாள் - சிறுதுணுக்கள்

1. சுதந்திரப் போராட்ட வீரர் தீரன் சின்னமலையின் 220-ஆவது நினைவு தினத்தை யொட்டி, அவருக்கு தமிழக ஆளுநர், முதல்வர் உள்ளிட்டோர் புகழஞ்சலி செலுத்தியுள்ளனர். 1805-ஆம் ஆண்டு இதே நாளில் அவர் சங்ககிரி கோட்டையில் தனது இன்னுயிரை தியாகம் செய்தார்.
2. சிரியாவில் கடந்த டிசம்பரில் அதிபர் பஷார் அல்-அசாத்தை ஆட்சியிலிருந்து அகற்றி, இடைக்கால அதிபர் அகமது அல்-ஷாரா அப்பதவிக்கு வந்தார். இவரது தலைமையிலான இடைக்கால அரசு, தனது கட்டுப்பாட்டை நிறுவபோராடி வருகிறது.
3. பாகிஸ்தானுக்கு அரசுமுறைப் பயணமாக வந்துள்ள ஈரான் அதிபர் மசூத் பெசெஷ்கியான், பாகிஸ்தான் பிரதமர் ஷாபாஸ் ஷெரீஃப்பை அவரது அதிகாரபூர்வ இல்லத்தில் சந்தித்தார்.
   1. இந்தச் சந்திப்பில், இரு நாடுகளுக்கு இடையே பல்வேறு துறைகளில் ஒத்துழைப்பை விரிவாக்க 12 இருதரப்பு ஒப்பந்தங்கள் கையொப்பமாகின. வர்த்தகம்,விவசாயம்,அறிவியல், தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்கம், தகவல் மற்றும் தொடர்பு, கலாசாரம், கலை, சுற்றுலா, பருவ நிலை மற்றம் கடல்சார் பாதுகாப்பு உள்பட துறைகள் சார்ந்த ஒப்பந்தங்கள் இதில் அடங்கும்.
4. ஈரானின் 3 முக்கிய அணுசக்தி தளங்கள் மீது அமெரிக்கா 'பி2 ஸ்பிரிட்' ரக விமானங்கள் மூலம் வெடிகுண்டுகளை வீசி தாக்குதல் நடத்தியது. இத்தாக்குதலைத் தொடர்ந்து, சர்வதேச அணுசக்தி முகமையுடனான (ஐஏஇஏ) தனது ஒத்துழைப்பை ஈரான் முறித்துக்கொண்டது.
5. இந்தியாவின் கடும் குளிர்பிரதேசமான லடாக் பகுதியில் விளையும் முக்கியத்துவம் வாய்ந்த சீபக்தார்ன் மற்றும் பக்வீட் விதைகள், நாசாவின் 'க்ரூ-11' விண்கலம் மூலம் சர்வதேச விண்வெளி நிலையத்துக்கு அனுப்பப்பட்டுள்ளன. விண்வெளியில் உள்ள நுண்ஈர்ப்பு விசையின்கீழ் இந்த விதைகள் எவ்வாறு செயல்படுகின்றன என்பது குறித்து ஆய்வு செய்யப்படவுள்ளது.
   1. அமெரிக்காவின் 'ஜாகுவார் ஸ்பேஸ்' என்ற விண்வெளி உயிரியல் நிறுவனம் இந்த ஆய்வை முன்னெடுத்துள்ளது.
   2. உலகின் - ஐந்து கண்டங்களில் இருந்து இந்தியா, மாலத்தீவு, ஆர்ஜென்டீனா, பிரேஸில், கோஸ்டாரிகா, நைஜீரியா, எகிப்து, பாகிஸ்தான் உள்ளிட்ட 11 நாடுகளின் விதைகள் ஆய்வில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.
   3. பெங்களூரைச் சேர்ந்த 'புரோட்டோபிளேனட்' என்ற விண்வெளி புத்தாக்க நிறுவனம் இந்த விதைகளை வழங்கியுள்ளது. புரோட்டோபிளேனட் நிறுவனத்தின் இயக்குநர் சித்தார்த் பாண்டே, 'நீண்டகால விண்வெளிப் பயணங்களின்போது இந்த விதைகள் உணவாகப் பயன்படுமா என்பது குறித்து ஆய்வு செய்யப்படும்' என்று தெரிவித்தார்.
   4. இந்தியாவின் சார்பில் லடாக்கில் விளையும் சீபக்தார்ன் மற்றும் ஊட்டச்சத்து நிறைந்த பக்வீட் விதைகள் ஆய்வுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன.
   5. விண்வெளி மையத்தில் ஒரு வார காலம் நுண்ஈர்ப்பு விசையில் வைக்கப்படும் இந்த விதைகள், பின்னர் 'க்ரூ-10' விண்கலம் மூலம் பூமிக்குத் திரும்ப கொண்டுவரப்படும்.

vi. பருவநிலை மாற்றத்தை எதிர் கொள்ளும் திறன் கொண்ட புதிய பயிர் வகைகளைக் கண்டறியவும், எதிர்கால விண்வெளி விவசாயத்துக்கும் இந்த ஆய்வு உதவும் என்று ஜாகுவார் ஸ்பேஸ் நிறுவனம் நம்பிக்கை தெரிவித்துள்ளது.

6. சென்னை மாமல்லபுரத்தில் ஆசிய அலைச்சறுக்கு போட்டி தொடங்கியது.
7. கஜகஸ்தானில் நடைபெற்ற கொசானோவ் நினைவு தடகள போட்டியில், இந்தியாவின் நீளம் தாண்டுதல் வீரர் முரளி ஸ்ரீசங்கர் சாம்பியன் பட்டம் வென்றார்.
8. மத்திய அரசு சார்பில் உருவாக்கப்பட்டு வரும் புதியசுரங்க கொள்கையில், அனைத்து ஒப்புதல்களும் 3 மாதங்களில் அளிக்கும் வகையில் நடைமுறைகள் வகுக்கப்பட்டு வருகின்றன. இதன் மூலம் நான்காவது மாதத்திலேயே கனிமங்களை வெட்டி எடுக்கும் பணியை ஒப்பந்த நிறுவனங்கள் தொடங்கிவிட முடியும்
9. மகாராஷ்டிர மாநிலம் மும்பையிலிருந்து குஜராத் மாநிலம் அகமதாபாத் வரை நாட்டின் முதல் அதிவேக (புல்லட்) ரயில் சேவை விரைவில் தொடங்கப்பட உள்ளது என்று ரயில்வே அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் தெரிவித்தார்.மணிக்கு 320 கி.மீ. வேகத்தில் செல்லக் கூடிய இந்த அதிவேக ரயில் சேவை ஜப்பான் நாட்டின் நிதியுதவியுடன் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. சுமார் ரூ.1.08 லட்சம் கோடி செலவில் இத்திட்டம் மேற்கொள்ளப்படுகிறது.
10. தமிழகத்தில் சிறுதானிய சிறப்பு மண்டலத்துக்கு, தேர்வாகியுள்ள 25 மாவட்டங்களில் சிறுதானியத் திருவிழா நடத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது. பொது மக்களிடையே சிறுதானியங்களின் பயன்பாடு மற்றும் முக்கியத்துவம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் இந்த திருவிழாவுக்கு ஏற்பாடு செய்யப்படவுள்ளது.
11. **செய்திகளில் இடம்பெற்ற சில முக்கிய நபர்கள் :-**

லாண்டோ நோரிஸ்- பிரிட்டிஷ் F1 கார் பந்தய வீரர்